# அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No.63/2007 RCOP.No.

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.R.இளங்கோ என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

வா.சா.2 15.03.2023

பெயர் - அன்பழகன் தந்தை/கணவர் பெயர் -

தொழில் வயது

இனம் சமயம்

கிராமம் வட்டம்

4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-

1. வா.சா.ஆ.8, 9 புகைப்படம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. வா.சா.ஆ.8 ரசீதின் தேதி வா.சா.ஆ.9 புகைப்படங்களில் குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ரசீது வா.சா.ஆ.9 புகைப்படங்களுக்கு உரியது கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

2. எனக்கு ஆங்கிலம் ஓரளவுக்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலம் என்னால் சொல்லப்பட்டு பின்னர் வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டது. நான் தாவா சொத்தில் தான் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 47 செண்ட். மேற்படி சொத்திற்கு உரிய முறையில் சுற்றுச்சுவர் எழுப்பி அதை நிரூபிக்கும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.9 புகைப்படங்களில் மரவேலி உள்ளது. இவ்வழக்கில் வழக்கு சொத்து சம்மந்தமான வருவாய்துரை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சொத்துவரி செலுத்துவதற்காக வழங்கப்பட்ட அறிவிப்பினை தாக்கல் செய்துள்ளோம். மேற்படி அறிவிப்பு தாசில்தாரிடம் இருந்து பெறப்பட்டது.

3. தாவா சொத்து கிராம நத்தம் வகைப்பாட்டை சேர்ந்தது. என் தந்தையுடன் பிறந்தவர்கள் ஐந்து நபர்கள், திரு.கிருஷ்ணன், திரு.லோகநாதன் (எனது தந்தை), திரு.நாராயணசாமி, திரு.ராமலிங்கம், திரு.ஆழ்வார். தற்சமயம் திரு.ஆழ்வார் (1ம் பிரதிவாதி) மட்டும் உயிருடன்

உள்ளார். இவ்வழக்கில் நான் 800 சதுர அடிக்கு மட்டும் தான் பட்டா தாக்கல் செய்துள்ளேன். மொத்தம் 47 செண்ட்டுக்கு உரிய பட்டா தாக்கல் செய்யப்படவில்லை. பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. தற்சமயம் 47 செண்ட்டும் என்னுடைய கட்டுபாட்டில், காலி மனையாகவும் அதில் எங்களது வீடு மட்டும் உள்ளது. மேற்படி வீடு ஓடுபோட்ட வீடு ஆகும். வீட்டில் எனது மகள் மற்றும் எனது பேரனுடன் நான் வசித்துவருகிறேன்.

4. 800 சதுர அடியில் மட்டும் தான் என்னுடைய வீடு அமைந்துள்ளது மீதி உள்ள 20 செண்ட் மட்டும் தான் எனக்கு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. காலி மனையில் முள்வேலி தவிர்த்து மரங்கள் அமைந்துள்ளது. மேற்படி மரங்கள் 4ம் பிரதிவாதியின் இடத்தில் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. இதே சொத்து சம்மந்தமாக மேலும் 2 வழக்குகள் நிலுவையில் உள்ளது. அவற்றில் ஒரு வழக்கு தாவா சொத்தின் ஒரு பகுதியை தவறுதலாக 1ம் பிரதிவாதி விற்றுவிட்டதால் அதை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மேற்படி விற்பனையில் தாவா சொத்தின் பகுதியை வாங்கியவர்களை இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை.

(4ம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை செய்வதற்கு வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது.)